


# ஜூலை மாத நினைவுகள்

தங்க. முகுந்தன்

# ஜூலை மாத நினைவுகள்!

05.07.2017

தங்க. முகுந்தன்

எனது

அரசியல் ஆசான்

அமரர் அருணாசலம் தங்கத்துரை

அவர்களுக்கு

இந்நூல்

சமர்ப்பணம்!!!

## முகவுரை

ஆடி (ஜுலை) என்றாலே இலங்கைத் தமிழர்களுக்கு ஏதோ தீண்டத் தகாத மாதம் என்றொரு நிலையை சில நிகழ்வுகள் ஏற்படுத்திவிட்டன. கறுப்பு ஜுலை எனப்படும் அதே மாதத்தில் எமது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் நால்வர் படுகொலை செய்யப்பட்டதோடு அது ஒரு துக்கத்துக்குரியதாக மேலும் வலுவடைகிறது!

இந்த மாதத்தில் கூட்டணியின் மறைந்த இரண்டு உறுப்பினர்களின் பிறந்த தினங்களும் வருகின்றன. நவாலி தேவாலயத்தின் மீதான தாக்குதலும் இதே மாதத்திலேயே வருவதால் இவற்றை நினைவு கூருவதற்காக இந்நூலை எழுதுகிறேன். ஒற்றுமையாக எல்லோரும் இருந்த அந்தக் காலம் என்றும் மறக்க முடியாதவை.

எமது தலைவர்களில் பலர் 2004இல் எமது கட்சியைவிட்டுச் சென்றாலும் வரலாற்றில் அவர்கள் எமது கட்சியினுடைய முன்னாள் அங்கத்தவர்களே!. 2004 இல் மட்டுமல்ல, கடந்த உள்ளூராட்சி சபை, மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட எமது கட்சியினால் நியமனம் பெற்றவர்கள்கூட தமிழரசுக் கட்சியில் ஐக்கியமாகி விட்டார்கள்!

என்னைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியின் மீது ஒரேயொரு குற்றச்சாட்டு மட்டுமே! அதாவது தந்தை செல்வாவின் அகிம்சைக்கு மாறாக 2004 தேர்தலில் "விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகள்" என்று ஏற்றுக் கொண்ட விடயமே! தந்தை திரும்பத் திரும்பச் சொன்னார் இந்நாட்டில் ஆயுதப் போராட்டம் எமக்கு அழிவையே தரும் என்று! அவரது வாக்கு தீர்க்கதரிசனமானது! சுதந்திரத்தின் பின் எவர்களுடைய பிரஜாவுரிமையைப் பறித்து நாடற்றவர்கள் ஆக்கினார்களோ அன்றே அவர் மொழிப் பிரச்சினை வரும் என்று கூறினார். அது நடந்தது. சுவிஸ் நாட்டின் நிலப்பரப்பில் 26 மாநிலங்களில் 4 மொழிகள் வழக்கத்திலுள்ளன. ஒரு மாநிலத்தில் மட்டும் ஒரு மொழிபேசும் உரிமை இருக்கிறது - இங்கு எமது நாட்டில் இரண்டு மொழிகளுக்கு சம அந்தஸ்த்தை கொடுக்க வேண்டும் என அவர் கோரினார். இன்றுவரை அது நடைபெறவில்லை. ஆனால் 2006 – 2007 ஆண்டு காலப் பகுதிகளில் அந்த நாட்டின் சட்டங்களைப் பற்றி அரசும் விடுதலைப் புலிகளும் ஆராய்ந்தன – ஆனால் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. தந்தையவர்கள் விரும்பிய ஆட்சி அதிகாரமுள்ள சுவிஸ் நாட்டில் நான்கரை வருடங்கள் வாழ்ந்தது எனக்குப் பெருமையாக இருக்கிறது!

சர்வகட்சி மாநாடுகள், அரசியல் சீர் திருத்தங்கள் என பேசிப்பேசியே தமது பதவிகளில் அனைவரும் காலம் கடத்துகிறார்கள். நீலன் திருச்செல்வத்தின் அரசியற் திட்டத்தை பாராளுமன்றில் வரவிடாமல் எதிர்த்தவர்கள் பெரும்பான்மையினர் மட்டுமல்ல. எமது கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் - யாரோ சிலரின் தாளத்துக்கு ஆடி அதை நிராகரித்தனர். இன்றும் ஏதோ அரசியல் அதிகாரப் பகிர்வு பற்றி சொல்கிறார்கள். நடந்தால் தமிழர்களுக்கு ஒரு விமோசனம் ஏற்படும். ஆனால் தநதை சொன்னது போல கடவுள் தான் எமக்கு .........

ஆடி மாத நிகழ்வுகளின் சுருக்கம்

ஜுலை 3 – திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பிறப்பு(1933)
5 – திரு. அ. துங்கத்துரை (1997)
9 – நவாலி தேவாலயப் படுகொலை(1995)
13 – திரு. அ. அமிர்தலிங்கம்,
திரு. வெ. யோகேஸ்வரன்(1989)
20 – திரு. மு. சிவசிதம்பரம் பிறப்பு (1923)
24 – கொழும்பில் கலவரங்கள், கொலைகள் - தீவைப்பு(1983)
29 – கலாநிதி நீலன் திருச்செல்வம்(1999)
இந்திய இலங்கை ஒப்பந்தம்(1987)



## எனது அரசியல் ஆசான் அமரர் அ. தங்கத்துரை அவர்களின் 20ஆவது வருட நினைவுகள்......

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், த.வி. கூட்டணியின் முன்னாள் அமைப்பு நிர்வாகச் செயலாளரும், தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், திருகோணமலை சிவானந்த தபோவன சிறுவர் இல்லத்தைப் பரிபாலிக்கும் நாகரத்தினம்பிள்ளை தங்கம்மாள் நம்பிக்கை நிதியத்தின் முன்னாள் பிரதான நம்பிக்கைப் பொறுப்பாளரும் - பொருளாளருமான அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களின் 20ஆவது ஆண்டு நினைவு இன்றாகும்.

5.7.97 சனிக்கிழமை மாலையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் புதிய மூன்று மாடிக் கட்டிடத் திறப்புவிழா நிறைவு பெற்ற பின் வாகனத்தில் ஏறும் சமயத்தில் கூடவே அவருடன் அதே கல்லூரியின் அதிபர் திருமதி. இராஜேஸ்வரி தனபாலசிங்கம், அதே கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. பெ.சி. கணேசலிங்கம், திருக்கடலூர் நாமகள் வித்தியாலய அதிபர் திரு. சி. ஜோசப், கொழும்பு அதிபர் திரு. கா. சீவரத்தினம் ஆகியோர் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டனர். படுகாயமடைந்த பொறியியலாளர் திரு. வே. ரட்ணராஜா அவர்கள் இரண்டு நாட்களின் பின்னர் மரணமடைந்தார்.

கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு சமுதாயம் ஒருபோதும் இப்படிப்பட்ட மிருகத்தனமான படுகொலைகளை ஏற்க மாட்டாது.

தங்கத்துரை கொல்லப்பட்டார் என்ற அதிர்ச்சிச் செய்தி கிடைத்ததும் திரு. ஜோசப் பரராஜசிங்கமும் பாரியாரும் கூட்டணி அலுவலகத்திற்கு வந்து தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்களைச் சந்தித்து இதுபற்றி நீண்டநேரம் கதைத்தவண்ணமிருந்தனர். ஏற்கனவே அனுபவத்தைப் பெற்று இவ் இம்சையின் கொடுமையை உணர்ந்த தலைவர் சிவா ஐயா கண்கள் குளமாக வேதனையுடன் மௌனமாக இருந்தார். பல வெளிநாடுகளிலிருந்தம் செய்தி அறிந்து பலர் இரவிரவாகத் தொடர்பு கொண்டவண்ணம் இருந்தனர்.

எளிமை, அன்பு, பொறுமை, உண்மை, நியாயம், துணிவு, இரக்கம் என்பவற்றிற்கு இலக்கணமாக சகிப்புத் தன்மைக்கு உதாரண புருஷராக எந்நேரமும் புன்சிரிப்புடன் இளவயதினர் அனைவரையும் தம்பி என்று அன்பு ததும்ப அழைக்கும் திரு. அ. தங்கத்துரை அவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் என்றும் நீங்காமல் இருக்கிறது.

8 வருடங்களாக அவருடன் கொண்டிருந்த அன்புப் பிணைப்பு ஏதோ வருடத்திற்கோரிருதடவை வழமைபோல இந்தியா போய் வருபவர் தற்போதும் இந்தியா போய்விட்டார். நிச்சயம் திரும்பி வருவார் என்றே எண்ணத் தோன்றுகிறது! எந்நேரமும் எம்முடனேயே இருக்கின்ற உணர்வு - என்னைவிட்டு இன்னும் மறையவில்லை.

உயரத்தில் சற்றுக் குறைவானாலும் - நிமிர்ந்த நடையும் - மேவியிழுத்த சிகையும் - கூர்மையுடன் ஆழம் பார்க்கும் விழியும் - நெற்றி அசைவுகள் கொண்ட பேச்சும் - எந்நேரமும் முறுவல் பூத்த இன்முகமும் - 4 முழ வேட்டியும் அரைக் கைச் சேட்டும் அணிந்த உருவமும் - சிந்தனையிலிருக்கும்போது இமைக்காத விழியும் - மௌன நிலையும் - காலையில் எழுந்ததும் தனக்கே உரித்தான ஒரு தடித்த ம்..ம்.. என்ற செருமலும் (தான் எழுந்துவிட்டதை எமக்குத் தெரிவிக்கும் ஒரு அறிவிப்பு) - சிலரைத் தொலைபேசியில் அழைத்தபின் சிரிக்கும் பெரியதொரு அஹ்..அஹ்..ஹா என்ற அசுரச் சிரிப்பும் நெருங்கிப் பழகுவோர் சிலருடன் அன்பாக மச்சான் என்றழைக்கும் விதமும் - இவை என்றுமே அவரை நினைவு கொள்ளச் செய்கிறது.

1989ஆம் ஆண்டு ஜூலை 13இல் படுகொலை செய்யப்பட்ட திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் மறைவுக்குப் பின் எங்களுடனேயே வந்து தங்கியிருந்து – தகர்த்து நொருக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை தூக்கி நிலை நிறுத்திய – ஒரு கற்றூணாக அர்ப்பணிப்புச் செய்த அவரை மறக்க முடியவில்லை. அன்று தொட்டு படுகொலைசெய்யப்பட்ட நாள்வரை தனது பணியை அமைதியாக – சலசலப்பில்லாமல் - விளம்பரம் செய்யாமல் நிதானமாகக் கூடிய அக்கறையுடன் முன்னெடுத்துச் சென்றதை நினைவுகூருவது என் கடமையாகிறது!

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக திருமலை மாவட்டத்தில் சிறப்பாகப் பின்தங்கிய பிரதேசங்களுக்கத் தன்னாலான அனைத்தையும் இரவு பகல் பாராது கடமையுணர்வும் - பற்றுறுதியும் கொண்டு செயற்கரியனவற்றைச் செய்தார். அதனால்தான் 1970ஆம் ஆண்டு மூதூர்த் தொகுதியில் இரண்டாவது அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டபோது பெற்ற வாக்குகளை விட(19,787) 24 ஆண்டுகளுக்குப் பிறகு திருமலை மாவட்டத்தில் 1994ஆம் ஆண்டில் கூடிய விருப்புவாக்குகளைப் பெற்றவர் என்ற பெருமையையும்(22,409) பெறுகின்றார். 1981 மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வாக்குகள் 44,692. திரு. தங்கத்துரை அவர்களே சபைத் தலைவராக இருந்தார்.

# முகவுரை

ஆடி (ஜுலை) என்றாலே இலங்கைத் தமிழர்களுக்கு ஏதோ தீண்டத் தகாத மாதம் என்றொரு நிலையை சில நிகழ்வுகள் ஏற்படுத்திவிட்டன. கறுப்பு ஜுலை எனப்படும் அதே மாதத்தில் எமது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் நால்வர் படுகொலை செய்யப்பட்டதோடு அது ஒரு துக்கத்துக்குரியதாக மேலும் வலுவடைகிறது!

இந்த மாதத்தில் கூட்டணியின் மறைந்த இரண்டு உறுப்பினர்களின் பிறந்த தினங்களும் வருகின்றன. நவாலி தேவாலயத்தின் மீதான தாக்குதலும் இதே மாதத்திலேயே வருவதால் இவற்றை நினைவு கூருவதற்காக இந்நூலை எழுதுகிறேன். ஒற்றுமையாக எல்லோரும் இருந்த அந்தக் காலம் என்றும் மறக்க முடியாதவை.


எமது தலைவர்களில் பலர் 2004இல் எமது கட்சியைவிட்டுச் சென்றாலும் வரலாற்றில் அவர்கள் எமது கட்சியினுடைய முன்னாள் அங்கத்தவர்களே!. 2004 இல் மட்டுமல்ல, கடந்த உள்ளூராட்சி சபை, மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட எமது கட்சியினால் நியமனம் பெற்றவர்கள்கூட தமிழரசுக் கட்சியில் ஐக்கியமாகி விட்டார்கள்!

என்னைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியின் மீது ஒரேயொரு குற்றச்சாட்டு மட்டுமே! அதாவது தந்தை செல்வாவின் அகிம்சைக்கு மாறாக 2004 தேர்தலில் “விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகள்” என்று ஏற்றுக் கொண்ட விடயமே! தந்தை திரும்பத் திரும்பச் சொன்னார் இந்நாட்டில் ஆயுதப் போராட்டம் எமக்கு அழிவையே தரும் என்று! அவரது வாக்கு தீர்க்கதரிசனமானது! சுதந்திரத்தின் பின் எவர்களுடைய பிரஜாவுரிமையைப் பறித்து நாடற்றவர்கள் ஆக்கினார்களோ அன்றே அவர் மொழிப் பிரச்சினை வரும் என்று கூறினார். அது நடந்தது. சுவிஸ் நாட்டின் நிலப்பரப்பில் 26 மாநிலங்களில் 4 மொழிகள் வழக்கத்திலுள்ளன. ஒரு மாநிலத்தில் மட்டும் ஒரு மொழிபேசும் உரிமை இருக்கிறது - இங்கு எமது நாட்டில் இரண்டு மொழிகளுக்கு சம அந்தஸ்த்தை கொடுக்க வேண்டும் என அவர் கோரினார். இன்றுவரை அது நடைபெறவில்லை. ஆனால் 2006 – 2007 ஆண்டு காலப் பகுதிகளில் அந்த நாட்டின் சட்டங்களைப் பற்றி அரசும் விடுதலைப் புலிகளும் ஆராய்ந்தன – ஆனால் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. தந்தையவர்கள் விரும்பிய ஆட்சி அதிகாரமுள்ள சுவிஸ் நாட்டில் நான்கரை வருடங்கள் வாழ்ந்தது எனக்குப் பெருமையாக இருக்கிறது!

சர்வகட்சி மாநாடுகள், அரசியல் சீர் திருத்தங்கள் என பேசிப்பேசியே தமது பதவிகளில் அனைவரும் காலம் கடத்துகிறார்கள். நீலன் திருச்செல்வத்தின் அரசியற் திட்டத்தை பாராளுமன்றில் வரவிடாமல் எதிர்த்தவர்கள் பெரும்பான்மையினர் மட்டுமல்ல. எமது கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் - யாரோ சிலரின் தாளத்துக்கு ஆடி அதை நிராகரித்தனர். இன்றும் ஏதோ அரசியல் அதிகாரப் பகிர்வு பற்றி சொல்கிறார்கள். நடந்தால் தமிழர்களுக்கு ஒரு விமோசனம் ஏற்படும். ஆனால் தநதை சொன்னது போல கடவுள் தான் எமக்கு .........

ஆடி மாத நிகழ்வுகளின் சுருக்கம்

ஜுலை 3 – திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பிறப்பு(1933)
5 – திரு. அ. துங்கத்துரை (1997)
9 – நவாலி தேவாலயப் படுகொலை(1995)
13 – திரு. அ. அமிர்தலிங்கம்,
திரு. வெ. யோகேஸ்வரன்(1989)
20 – திரு. மு. சிவசிதம்பரம் பிறப்பு (1923)
24 – கொழும்பில் கலவரங்கள், கொலைகள் - தீவைப்பு(1983)
29 – கலாநிதி நீலன் திருச்செல்வம்(1999)
இந்திய இலங்கை ஒப்பந்தம்(1987)




AMIRTHALINGAM
COMMEMORATION COMMITTEE







1991ஆம் ஆண்டு (நாள் சரியாக ஞாபகமில்லை) வடக்குக் கிழக்குப் பகுதியின் புனரமைப்பு புனர்நிர்மாணங்களுக்காக வெளிநாட்டு உதவி ஒன்று கிடைக்கவிருந்த சமயத்தில் ஒரு பெரிய திட்டம் (Project) ஒன்றை நள்ளிரவு தாண்டிய நேரத்தில் ஏறக்குறைய 2.30 மணிவரை தனியாக இருந்து ஆங்கிலத் தட்டச்சில் தயார் செய்து முடித்ததை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன்.

வடக்கு கிழக்கு நெடுஞ்சாலைகளில் செப்பனிடப்படவேண்டிய பகுதிகள், மின்சாரம் வழங்க வேண்டிய பகுதிகள், பாடசாலைகளுக்கான புதிய கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், மாணவர் ஆசிரியர் விடுதிகள், திருத்தப்படவேண்டிய குளங்கள், விளையாட்டு மைதானங்கள், குடிநீர் வசதிக்கான கிணறு அமைத்தல் போன்றவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை. கல்விக்கும் கல்வி வளர்ச்சிக்கும் - ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல் பாடசாலை வளங்களை அதிகரித்தல் போன்ற சகல பணிகளிலும் அவர் கூடிய அக்கறை காட்டிவந்தார்.

கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் பற்றிய விபரங்களைப் பெற்று அவற்றைத் தொடர்புடைய ஆணைக்குழு, பாதுகாப்பு அமைச்சு, மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை இவர்களுடன் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்க, வழக்குகள் ஒழுங்கு செய்து அவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணப் பெரிதும் உழைத்தார். அவருடைய தேசிய அடையாள அட்டையில் தொழில் என்ற பகுதியில் கமம் என்று இருந்தது. ஏன் நீங்கள் நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தர் அல்லது சட்டத்தரணி என்று குறிப்பிட்டிருக்கலாமே என்று ஓர் நாள் சொன்னதற்கு — அது எமது பரம்பரை பரம்பரையான தொழில் அதை நாம் ஏன் குறிப்பிடுவதில் தயக்கம் காட்ட வேண்டும் என்று சொன்னார்.

மிகவும் எளிமையும் அன்பும் கொண்ட அவர் 1994இல் தேர்தலில் வெற்றிபெற்றபின் 1995 மார்ச்சில் மாதிவெலையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் விடுதிக்குச் சென்றார். அதுவரை சுமார் 6 வருடங்களாக, தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்களும் மூத்த துணைத்தலைவரான வீ. ஆனந்தசங்கரி அவர்களும் ஒன்றாகவே எம்முடன் தங்கியிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினராகிய பின்னரும் முன்னரைப் போலவே நடந்து தனியாகவும் - பஸ்வண்டிகளிலும் பிரயாணம் செய்வார். தனது பாதுகாப்பைப்பற்றி சிறிதேனும் அவர் கவலைப்படவில்லை. நீதி நியாயம் உண்மை உள்ளவன் ஏன் கவலை கொள்ள வேண்டும் - அவனுக்கு என்ன பயம் என்று அடிக்கடி சொல்லுவார். ஒரு தடவை திருமலை செல்ல புகையிரத நிலையம் போவதற்கு

138 இலக்க பஸ் வண்டியில் அவர் முன்பு ஏற பின் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏற அவரை வழியனுப்பி வைத்ததும் மறக்க முடியாத சம்பவம். அவரது அறையில் - காலைக்கடன்களை முடித்துவிட்டு ஏறக்குறைய அரை மணிநேரம் தியானத்தில் அமர்வார். காலையில் வாக்கிங்போகும்இ அமைச்சர் மஜீத் நேரே அவரது அறைக்குள் போய் அவர் தியானத்திலிருந்தால் “பரவாயில்லை மேணை! அவர் தியானம் முடிந்த பிறகு கதைக்கலாம்” என்று சொல்லி அவருக்கு முன்பாக கதிரையில் அமர்ந்து அவரையே பார்த்தபடி இருப்பதும் மறக்கமுடியாது.

தனது தந்தையார் அருணாசலம் அவர்கள் இந்தியாவிலிருந்து வந்து ஓரிரு நாட்கள் எம்முடன் தங்கியிருந்த பின் அவரை திருமலைக்கு அனுப்பி வைப்பதற்காக அதிகாலை புகையிரத நிலையத்துக்குச் சென்று வழியனுப்பிய போது புகைவண்டியிலிருந்த பலரும் அவரின் கையைப் பிடித்து இழுத்து தங்களுடன் வரும்படி கேட்டு தொல்லை கொடுத்தபோது வேலைகள் நிறைய இருக்கின்றன. பின்பு கட்டாயம் வருவேன் என்று சொல்லி அவர்களுக்கு அருகில் உட்கார்ந்து பல நிமிடநேரம் சிரித்து அளவளாவியதையும் மறக்க முடியவில்லை. அவருக்கு முஸ்லிம் சிங்கள நண்பர்கள் எனப் பலர் இருந்தனர். சகலரையும் மதித்து அவரவர் கொள்கை - இலட்சியங்களுக்கு இயைந்த போக்கினைக் கடைப்பிடிக்கும் அவரது தாராள குணம் ஒரு தனி மரியாதையை ஏற்படுத்தியிருந்தது. நீதி கோருபவன் தான் நீதி வழங்க ஆயத்தமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தை எமக்கு அடிக்கடி ஞாபகப்படுத்துவார். அவரைப் போன்றதொரு எளிமையான தலைவரை ஒருபோதும் காணமுடியாது. அந்த அளவுக்கு அவர் ஒரு தங்கமான துரையாகவே மிளிர்ந்தார்.

அவர் கொல்லப்பட்ட பின் 20.07.1997 ஞாயிற்றுக்கிழமை ஜனாப் எம் ஈ எச் மஹ்ரூப் அவர்களும் அவரது மெய்ப்பாதுகாவலர், பாடசாலை அதிபர், சாரதி. நண்பர். சாரதியின் 3வயதுக் குழந்தை ஆகிய அறுவரும் காலை 10.30 மணியளவில் திருமலை 6ஆம் கட்டையில் படுமோசமாகச் சுட்டும் பின் வாளால் வெட்டியும் கொல்லப்பட்ட கொடூரமான சம்பவம் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். அமரர் தங்கத்துரை அவர்கள் கொலைசெய்யப்பட்ட மறுதினம் ஞாயிறு மதியமளவில் திரு. அஸ்வர் பா.உ அவர்களும் திரு. மஹ்ரூப் பா.உ அவர்களும் கூட்டணிக் காரியாலயத்திற்கு வந்து தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்களிடம் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அனுதாபப் புத்தகத்தில் தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் எழுதி கையொப்பமிட்டுச் சென்றார்கள். 9.7.97 புதன்கிழமை இறுதி ஊர்வலத்திற்கு முன் இடம்பெற்ற இரங்கல் நிகழ்வின்போதும் மஹ்ரூப் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். கட்சிச் சார்பில்லாமல் எல்லோருக்கும் உதவி செய்யும் அவரது இயல்பான தன்மைகளைக்

குறிப்பிட்டுப் பேசினார். பாராளுமன்றம் திரு. தங்கத்துரையின் மறைவு குறித்து அறிவித்து ஒத்திப் போடப்பட்டது. ஆனால் திருமலைப் பாடசாலைகள் அவருக்கு அஞ்சலிக்காக மூடப்படவில்லை என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியமையும் குறிப்பிடத் தக்கது.

தங்க. முகுந்தன்
முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினன் - TULF

## 1983 ஜூலை இனப்படுகொலைகள்!

23.07.1983 காலையில் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் இராணுவ வாகனங்களின் தொடரணிமீது நிலக்கண்ணிவெடித் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச்சூடுகள் நிகழ்த்தியதன் மூலம் 13 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அதன்பின் பஸ்வண்டியில் வந்தவர்களை இராணுவம் இறக்கிச் சுட்டு தொடங்கிய பிரச்சினை அடுத்தநாள் 24 இரவு பொரளையில் இராணுவத்தினரது மரணச் சடங்குகளோடு தமிழர்களுக்கு எதிராக கொழுந்து விட்டெரிந்தது. கொழும்பில் பொரளையில் ஆரம்பித்த கலவரங்கள் - பின்னர் படிப்படியாக பல இடங்களுக்கும் பரவின. தமிழர்களின் கடைகள், வீடுகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள் என அனைத்தும் கொழுத்தி எரிக்கப்பட்டன. தமிழர்களைக் கண்டதும் சுட்டும் அடித்தும் கொலை செய்தனர். எரியும் வாகனங்களினுள்ளே உயிரோடு கொழுத்தினர். 25ஆந் திகதியின் பின்னர் கொழும்பிலிருந்து கம்பஹா மற்றும் தமிழர் வாழும் பிரதேசங்களுக்கும் இந்த வன்முறை பரவின. இந்திய ஸ்தானிகரது இல்லமும் சேதமடைந்தது. வெலிக்கடையில் 35பேர் படுகொலை செய்யப்பட்டனர். பின்பு 27ஆந்திகதியும் 19பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். அகதி முகாம்களிலிருந்த மக்கள் கப்பல்களில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதன் விபரங்கள் ஏற்கனவே பல நூல்களிலும் - இணையத்தளங்களிலும் பதிவிருப்பதால் அதிகமாக எழுதவில்லை.

1998ல் திருகோணமலையில் நடந்த முதலாவது நினைவு நிகழ்வில் எனது கவி!

பாணர் மாநகர் சபையில்
பிரதிநிதிப் பதவியேற்று
பொது நிகழ்வு முதலிதுவில்
கலங்குகின்றேன் - மனம் வெதும்புகின்றேன்.
ஈனச் செயலின் கொடுமையால்
இன்று இங்கில்லாத
அமரர்கள் அறுவர்க்கும்
பாவால் அஞ்சலிகள்!
அமரர் அருணாசலம் தங்கத்துரை
நினைவுப் பணி மன்ற ஏற்பாட்டில்
அமரர்களின் முதலாம் ஆண்டு
நினைவு தினக் கூட்டத்தில்
என்னையும் நினைவுக் கவிதை நிகழ்த்த
அழைப்பித்த மன்றத்தினருக்கு நன்றி!
அமரர்கள் பணிகளை மீட்டிடக் குழுமிய கூட்டத்தினர் நீவிர்
அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கங்கள்.
அரங்கினை வழிநடத்தும் தலைவர்க்கும்
வரவேற்புரை நிகழ்த்தியவர்க்கும்
தமிழ்வாழ்த்து இசைப்பித்த இளவர்க்கும்
நினைவுரை -பாடல் - கீதம் - சிறப்புரை
நன்றி இவைகளுக்காய் வந்திட்ட பெரியோர்க்கும்
கவிதைச் சரம் நிகழ்த்திய தம்பி ஈழபாரதிக்கும்
அமரராம் எம்பியின் அருமைத் துணைவிக்கும்
உடன்பிறவாச் சகோதரன் அகிலனுக்கும்,
தங்கை தர்மினிக்கும் மற்றும்
அமரரின் குடும்பத்தவர் உறவினர்
நண்பர்கள் அனைவர்க்கும் எனது
மனம் நிறைந்த சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.
கவிதை ஞானம் ஏதுமில்லா எனக்கு
நினைவுக் கவிதை தந்துள்ளார்கள்.
தமிழறிவில் யான் என் அறிவுக்கு எட்டியவாறு
உங்கள் முன் என் அரசியல் குரு
அமரர் தங்கத்துரை அவரின்
நினைவை மீட்கவுள்ளேன்.

குற்றம் நீக்கிக் குணம் கொள்ள வேண்டுகிறேன்.
அமரரை அன்பாய் அழைத்த மாமா எனும் பதத்தை தொடரும் கவியிடையில் சேர்ப்பேன். ஏற்றுக்கொள்ள தாழ்வாய் வேண்டி தொடருகிறேன் என்கவிப் பேச்சை!

89இல் நடந்ததோர் பயங்கரம்!
புல்லர்ஸ்வீதியில் புல்லட்டுக்களின் சத்தம்!
கூட்டணிக் கட்சித் தலைவர்கள் சூடு!
கொல்லப்பட்டனர் இருவர்! – படுகாயமடைந்தார் தலைவர்!
குறிப்பினை அறிந்து உதவிட்டார் மாமா!
அவர்தனுடன் நானும் அறிமுகமானேன்!
மாடிவீட்டில் அருகருகில் இரு அறைகளில் வாசம்!
மாமா அவர்கள் நல்ல உயரமில்லை.
ஆனால் உள்ளத்தால் உயர்ந்தவர்!
எளிமை – அன்பு புன்சிரிப்போடு
பின் கை கட்டும் தனியான மிடுக்கு!
ஆழ்ந்து சிந்திக்கையில் அரிய தவயோகி!
தம்பி என எல்லோரிடமும் சகசமாய்ப்பழகி
பற்பல வேலை புரிவார்!
தட்டெழுத்தச்சையும் தானே செய்வார்!
கோபம் என்பதை தானும் அறியார்!
அது எட்டிப் பார்க்க இடமில்லாத
பொறுமைப் பெட்டி நீங்கள் மாமா!
நடைதான் அவரது பெரும்பொழுது வாகனம்.
தூரவரும் போது செருப்புச் சத்தம் கேட்டால்
நள்ளிரவில் மாமா தானென்று நம்பி – கதவு துறப்பேன்!
கோட்டைப் புகையிரத நிலையத்தில் அப்பா
அருணாசலத்தை வழியனுப்பிவைக்க நானும் சென்றேன்.
ரெயிலில் ஏறி ஊரவர் நண்பர்
தம்முடன் வாருங்கள் என அழைக்க
பின்பொருமுறை வருவேன் என்றே கூறி
அவர்தம் கைபிடித்தும் - கட்டியணைத்தும் - ரெயிலில்
அவர்தம்மோடு இருக்கையில் அமர்ந்தும்
குழந்தைபோல இருந்த காட்சி
இப்போதும் எனக்கு மறக்கவில்லை.
அரசியலில் குரு நீரே எமக்கு!
எத்தனை விளக்கம் அளிப்பீர் நமக்கு!
நேரகாலம் போவதும் தெரியாது!
அகிம்சை அன்பு மக்கள் சேவகன் - மக்களோடு இருத்தல்
நேர ஒதுக்கீட்டைத் தவிர்த்து எந்நேரமும்
அவர்பணி புரிதலே நீதி என்று கூறுவீர்கள்.
காந்தியின் மீது அளவில்லா பற்று!
அகிம்சையும் அவர்தம் மூச்சு!
தந்தை செல்வா வழிதனை ஏற்று
மூதூர்த் தொகுதி சபையில் வென்று
தமிழரசுக் கட்சியில் தொண்டும் ஆற்றி
தலைவரும் ஏகி ஏற்றம் கண்டீர்!

ஆம் இறக்கும்போது தமிழரசுக் கட்சித் தலைவர்!
காணாமற் போவோர் - கைதாவோர்
அனைவர்க்கும் பிரிவு பிரிவாய் - தொகுதி
மாவட்டம் மாகாணம் எனப் படிவம் அச்சிட்டுப்
பாங்காய்ப் பணிபுரிந்து அபலைகள் - உறவினர்
குடும்பத்தவர்க்கு ஆறுதல் அளித்தீர்!
இரக்கம் எனும்போது ஓர் கடிதம்
நினைவுக்கு - கூறுகிறேன் சபையோரே!
இது ஒன்றே போதும் மாமா மக்களுடன் கொண்டிருந்த
ஆழமான தொடர்பு!

ஆலய வீதி பாலையூற்று
அந்தோனியம்மா எழுதிய கடிதமிது!
எனது மகன் கைது செய்யப்பட்ட
விபரம் அனுப்பியிருந்தேன். எங்களோடு அனுப்பிய சிலர்
கையெழுத்துப் போடவில்லை என்பதனால்
திருப்பி அனுப்பியிருந்தீர்கள்! அப்படி
அக்கறையோடும் இரக்க சிந்தனையோடும்
நல்லிதய நோக்கோடும் நீங்கள் செயற்படுவதை
என்னால் உணர முடிகிறது!
மேலும் தகவல் அறிந்தால் தயவாக அறிவியுங்கள்!
தங்கள் உடல் உள ஆன்மீக தேவைகளை
நிறைவாக அளித்தருள இறைவனைப்
பிரார்த்தனை செய்கின்றேன்.
இரக்கம் - அன்பு கிராமத்தில் பிறந்த உங்கட்கும்
எமக்கும் தொட்டில் பழக்கம்!
மாமா நீங்கள் மூதூர் - நான் மூளாய்!
மூன்றெழுத்துப் பெயர்கொண்ட
சிறு கிராமத்தவர் நாம்.
பட்டணத்துக்காரரின் பகட்டு
வெறுப்பு எமக்கில்லை!
இதன் நிமித்தம்தானோ?
உங்களுடன் கூடவே பழகும்
வாய்ப்பும் இன்றும் நீங்களில்லா
வேளையும் தொடர்ந்து கொண்டிருக்கும்?
ஆகா என்ற அசுரச் சிரிப்பும்
ஓம் மச்சான் என்று உறவுமாடி
பற்பல பணிகளாற்றிய மாமா
உம்பணி எடுத்துச் சொல்ல நானும்
வந்த நேரம் போதாதெனினும்
ஓரிரு சிறப்பை அவையோர் அறிய
சொல்கிறேன் தொடர்ந்து கேட்டறிவீரே!

கேட்டறியத் தேவையில்லை உங்கள் எம்பி ஊருக்குச் செய்தது!
நீங்கள்தானே அவரின் பணியை மெச்சி
இங்கு நினைவு கொள்ள வந்துள்ளீரே!
தன்னூர் - தொகுதி – மாவட்டம் மற்றும்
மாகாணம் மாநிலம் பரந்து
பின்தங்கிய பகுதிகளில் எல்லாம்
தான் பட்ட துயர் கல்வியில்
மாணவர் பெறாமல் வசதி வாய்பை
குறிப்பால் உணர்ந்து பள்ளிகளுக்கு
பன்முகப்படுத்திய நிதியின் மூலம்
பலமாடி கட்டியும் பலவளம் பெருக்கியும்
பாராதிருந்த சாலைகள் திருத்தியும்
மின்னொளி வேண்டியும் உழைத்திட்டார் பலபணி!
இன்று திருமலையில் காணும்
கல்விச் சாலைகள் எல்லாம்
மாடிக்கட்டிடம் இருப்பது அவர்
செய்துபோன அரும்பணி அன்றே!
ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்க்கு
சிவானந்த தபோவனம் சீராய்ச்சிறக்க
நாகரத்தினம்பிள்ளை தங்கம்மாள் நம்பிக்கை
நிதியப் பொறுப்பையேற்று பொருள் சேகரித்து
ஆண்கள் விடுதி கட்டி முடித்து அரும்பணி புரிந்தீர்!
மாமாவின் பொறுமைக்கு பம்பலப்பிட்டி
சரஸ்வதி ஹோலில் கொழும்பு வாழ் தமிழர்
பணிக்குழு நடத்திய கூட்டத்தில் நடந்த
வேறோர் சம்பவம் - கேடுகெட்ட தமிழர்
எனப்பேசி கைதட்டுவாங்கிய குமாரருக்கும்,
மலையக மக்கள் முன்னணியின் சந்திரசேகரனுக்கும்
டெலோ சிறீகாந்தாவுக்கும் ஒற்றுமை இருந்தது– பேச்சில்!
வீறான பேச்சு! நிமிடத்துக்கு ஒருதடவை
கைதட்டும் கரகோசமும் - இறுதியாக
மாமா – அமைதியும் பொறுமையும் நிறைந்த
ஆராய்ச்சிப் பேச்சு! கேடு கெட்டுப் போனால்
நல்லதுதானே! ஆவேசப் பேச்சால் கொதித்திருந்த
கூட்டம் அமைதிப் பேச்சினால் அடங்காமல்
எழுந்து கூச்சல் போட்டது! கேள்வி கேட்டது!
எந்தப் பதட்டமும் இன்றி நிதானமாய்ப் பதிலளித்தார்!
மாமா தங்கத்துரை. இறுதியாக அனைவருடனும்
அன்பாய் அளவளாவி விடைபெற்று வந்தார்.
நிர்வாகத் திறனுக்கு உங்களுக்கு நிகர் எவருமில்லை!
கூட்டணியில் அமைப்பு நிர்வாகச் செயலாளராய்
இருந்திட்ட வேளை – தனித்தனி ஒவ்வொரு


நிர்வாக உறுப்பினருடன் விவாதித்து முடிவு எடுப்பீர்கள்.
அதனால் தான் கூட்டணிக்குள்
உங்களின் கருத்தை அறிவதில் ஆர்வம் காட்டினர் பலர்.
சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் மாடிக்கட்டிடத்தைத்
திறந்து வைத்துப் பேசியபின் உள்ளம்குளிர – உறவானோர்
ஐவருடன் உலகத்தை விட்டுப் பிரித்துவைத்த
ஈனர்கள் கூட்டம் யாரென உங்களிடம் கேட்டு
என் நினைவை முடிக்கின்றேன் மாமா!
யாரென்று நீங்கள் சொல்லுங்கள் மாமா!
வணக்கம்.











1995 ஜுலை 9 நவாலி தேவாலயப் படுகொலைகள் நினைவுஸ்தூபி







ஒதுக்கிய திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் இன்றும் தமது ஆதரவாளர்களின் வேண்டுகோளை ஏற்று தேசியப்பட்டியலில் இடம்பெற ஒத்துக்கொண்டுள்ளார். அவரது தேவை இன்றைய நிலையில் அவசியமானது. பலரும் எதிர்பார்க்கும் அவரது ஆலோசனைகளை சிதறடிக்க வேண்டாம் என்பதே எனது பணிவான வேண்டுகோளாகும்.

நன்றி


அன்புடன் பணியிலுள்ள, தங்க. முகுந்தன்

அவரது நினைவாக இலண்டனில் வெளியிடப்பட்ட முதலாவது ஆண்டு மலரிலிருந்து சில வரிகள்.

சொகுசான வாழ்க்கையைத் தேடாமல் சாதாரணமான ஒரு மனிதராக வாழ்ந்தார்.தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின் அவரது பணிகளை ஏற்று செயற்பட்ட செயல்வீரர் காசுக்கு ஆசைப்படாத ஒரு மனிதர்
காந்தியைப்போல வாழ்ந்த சட்ட வல்லுனர் - அரசியல் தலைவர் - ஆன்மீகவாதி







காந்திவழியில் போராடிய மாபெரும் தலைவர் உடுப்பிட்டி சிவா

எனக்கு அரசியல் வழிகாட்டிய ஆசான்களில் ஒருவரான தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் மு. சிவசிதம்பரம் அவர்களை விழித்து அவர் தேசியப்பட்டியலில் பாராளுமன்றம் செல்ல இந்தியாவிலிருந்து வருவதற்கு முன்பாக 16.12.2001ல் ஞாயிறு தினக்குரலின் 10ம் பக்கத்தில் வெளியான "சிவாவுக்கு ஒரு மடல்" என்ற சத்யனின் கடிதத்துக்கு 21.12.2001ல் நான் எழுதிய பதில் இன்றுவரை பிரசுரிக்கப்படாத நிலையில் அக்கடிதத்தை இங்கு குறிப்பிடுகிறேன்.

செய்தி ஆசிரியர் - தினக்குரல் - கொழும்பு.

அன்புடையீர் - கடந்த ஞாயிறு சிவாவுக்கு ஒரு மடல் என்ற சத்யனின் கடிதம் சார்பாக, அவரது உதவியாளன் என்ற வகையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசுவாசமான தொண்டன் என்ற வகையிலும் இப்பதில் கடிதத்தை எழுதுகின்றேன். தர்மப்படி பிரசுரிப்பீர்கள் என நம்புகின்றேன்.

எதையும் குறிப்பிட்டு எழுதவேண்டிய தேவை எனக்கு இருப்பதாக இல்லை. ஏனெனில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள் தான் தொடர்ந்தும் தலைவராக இருக்கின்றார். இது மக்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவருக்கும் தெளிவாக - அறிவுபூர்வமாகத் தெரியும். கடந்த வருடம் பொதுத்தேர்தலின்போது மட்டுமல்ல, சகலதேர்தல்களிலும் ஏன் முக்கிய விடயமான தற்போதைய நான்கு கட்சி கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட முன்பும் - பின்னரும் எமது சிரேஷ்ட துணைத் தலைவர், செயலாளர் நாயகம் ஆகியோர் இந்தியா சென்று தலைவர் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுவந்தமை நீங்கள் அறியாதிருக்கலாம். ஆனால் எமது கட்சியினர் மற்றும் பலருக்கு இது தெரிந்த ஒரு விடயம். கடந்த தேர்தலின்போதும், அதற்குமுன்னரும் தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு கேட்டு விடுத்த செய்திகளையும்(ஒலிப்பதிவுநாடா, துண்டுப்பிரசுரம்) நாம் மறந்துவிடலாகாது. இம்முறை வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைகள் காலம்காலமாக பாதுகாக்கப்படக்கூடிய ஆவணங்களில் ஒன்றாகும். ஏதோ எழுதவேண்டும் என்பதற்காக எழுந்தமான முறையில் ஒரு தலைவரைப்பற்றி விமர்சனம் செய்கையில் அவரது கடந்தகால செயற்பாடுகளையும் எடுத்து நோக்குவது சிறப்பாக இருக்கும்.

1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பருத்தித்துறையில் போட்டியிட்டு தோல்வியடைந்த திரு. மு.சிவசிதம்பரம் அவர்கள் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் மற்றும் அரசுக்கு எதிரான வேலைநிறுத்த எதிர்ப்புப் போராட்டங்களில் கட்சிவேறுபாடின்றி ஆதரவு அளித்துவந்தார். 1960 மார்ச் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் 7365 வாக்குகளைப் பெற்றுத் தெரிவானார். பின் 1960 ஜுலையில் அதே உடுப்பிட்டித் தொகுதியில் 9080 வாக்குகளைப் பெற்று மீண்டும் தெரிவானார். 1965ல் 12009 வாக்குகளைப்பெற்றுத் தெரிவாகிய சிவசிதம்பரம் அவர்கள் 1970ல் 11662 வாக்குகளைப் பெற்று தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட ஜெயக்கொடி அவர்களினால் தோற்கடிக்கப்பட்டார். 1972ம் ஆண்டு புதிய அரசியலமைப்பினை எதிர்த்து தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணியை உருவாக்கியவேளையில் அதன் இணைச் செயலாளர்களில் ஒருவராக இருந்தார்.

1977ல் நல்லூரில் 29858 வாக்குகளைப் பெற்று (28137 வாக்கு வித்தியாசத்தில் - இலங்கையில் தனிஉறுப்பினர் தொகுதியில் அதிகூடியது) வெற்றியடைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரானார். 1989ல் யாழ் மாவட்டத்தில் 8359 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். 1989ல் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமுற்று மயிரிழையில் தப்பி சிகிச்சைபெற்ற வேளையிலும்கூட தமக்குக் கிடைத்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்காது விட்டவர். 1994ல் வன்னியில் போட்டியிட்டு தோல்வியடைந்த பின்னரும் கட்சிப் பணிகளில் தீவிரமாகப் பங்குகொண்டவர். 1998ல் சுகவீனமுற்றபோது இந்தியாவுக்குச் சென்று தனது குடும்பத்தவர்களுடன் இருந்து கட்சியின் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருவதை நான் குறிப்பிட்டேயாகவேண்டும்.

கடந்த 5.12.2001ல் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கு முன்னரே தேசியப்பட்டியலில் முதலிடம் வழங்கப்பட்ட எமது தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்களை எந்தவித ஆட்சேபனையுமின்றி 4 கட்சிகளும் ஏற்றுக்கொண்ட பின்னரே தங்கள் பத்திரிகை உட்பட அனைத்துப் பத்திரிகைகளும் செய்தியைப் பிரசுரித்தன. இந்த 4 கட்சிகளின் கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் எந்தக் குறிக்கோளை எட்ட முற்படுகிறதோ அதுவே அந்த அமைப்பின்மூலம் தெரிவாகியுள்ள 15 உறுப்பினர்களின் கடமையாகும்

1989ல் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களின் மறைவுக்குப்பின் 1990ல் திரு. க.யோகசங்கரியின் மறைவுக்குப்பின் 1994ல் தேசியப்பட்டியல் மூலம் தெரிவாகியிருக்கக்கூடிய வேளையிலே அவற்றை ஏற்காது

## கலாநிதி. நீலன் திருச்செல்வம் பற்றி சில வார்த்தைகள்

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று". – குறள்.

ஒன்று மாத்திரமல்ல பல குறள்களில் மனிதன் இப்படி நடக்க வேண்டும் என்று அருமையாக திருவள்ளுவர் சொல்லியுள்ளார். நாம் யார் - சொந்தப் புத்தியை பாவிக்க! எவனோ ஒருவன் அல்லது ஒரு சிலர் சொல்லுவதற்கு தலையாட்டும் மந்தைகளல்லவா நாங்கள்! இல்லாவிட்டால் நல்லது எது கெட்டது எது என்று தெரியும் அறிவு நம்மிடமிருந்து விலகுமா?

எளிமையான - அறிவுஜீவியான - அப்பாவிக்குணமுடைய இம் மாபெரும் மேதையை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் மிலேச்சத்தனமாக படுகொலைசெய்த புலிகள் தமக்கு இருந்த கொஞ்சநஞ்ச நற்பெயரையும் கெடுத்துக் கொண்டதுதான் உண்மை. இந்த மனிதரைக் கொன்றுவிட்டு அவர் தயாரித்த தீர்வுத் திட்டம் - அவர்களின் அரசியல் ஆலோசகரால் அருமை எனப் பகன்றதையும் நாம் மறந்துவிட முடியாது! இந்த மாபாதகச் செயலைச் செய்தவர்கள்தான் எமக்கு ஏகப் பிரதிநிதிகளென்றால் .... கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

தான் உண்டு தன் வேலையுண்டு என்று இவரும் இருந்திருக்கலாம். ஆனால் பிறநாடுகளில் அரசியல் சாசனங்களை வகுக்கும் தனது பணியை இவர் அன்றைய ஜனாதிபதி திருமதி சந்திரிகா அவர்களுடன் இணைந்து - இலங்கையில் புரையோடிப்போயுள்ள பிரச்சனைக்கு - தீர்வுகாண முற்பட்டதற்கு கிடைத்த பரிசே இன்று எம்மக்களைப் பிடித்து ஆட்டிவைக்கிறது! ஒருவகையில் இந்தப் பாவமும் எம்மை சும்மாவிடாது! அவர் மரணித்த பின் சுமார் 4 – 5 மணி நேரங்களாக அவரது உடல் அநாதரவாக பாதையில் ரத்தம் சொட்டச்சொட்ட வலது கை நிலத்தில் தொட்டபடி ..... ஏதோ சத்தியம் செய்வதுபோல இருந்த இந்தக் காட்சி இன்றும் .................





